# யாழ். குடா எங்கும் நேற்று விமானத்தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில், மல்லாகம், சுன்னாகம், மயிலங்காடு, அளவெட்டி, துர்க்கை அம்மன் கோவிலடி பின்புறம், கல்வியங்காடு, கட்டப்பராய் பகுதியில் நேற்று அகோர விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளது. இதில் 10 பேர் படுகாய மடைந்தனர். 24 வீடுகள் பலத்த சேதமடைந்தன.

இரு பொம்மர் விமானங்கள் அளவெட்டி, மல்லாகம், சுன்னாகத்தில் 12 குண்டுகளை வீசியதில் 10 வீடுகள் பலத்த சேதப்படுத்தியுள்ளது. சிலர் சிறிய காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

நண்பகல் 3 மணியளவில் கல்வியங்காடு கட்டப்பராய் அம்மன் கோவிலடியில் இடம்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | மாசி 18 | ஷஃபான் 14 | இதழ் 21

யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | 3-3-1991

## கூட்டுரோந்திற்கு இந்தியா எதிர்ப்பு?

(கொழும்பு)

பாக்கு நீரிணை கடல் பிரதேசத்தில் இந்திய கடற்படையுடன் இணைந்து கூட்டு கடல் ரோந்தில் ஈடுபட இலங்கை முன்வந்துள்ள போதிலும் இந்தியா அதனை விரும்பவில்லை.

இது குறித்து அண்மையில் இலங்கை வந்த இந்திய முன்னாள் வெளியுறவு அமைச்சர் திரு சுக்லா அரசுடன் பேச்சுக்கள் நடாத்தியிருந்தார். அப்போது இலங்கை இதனை வலியுறுத்தியிருந்தது.

எனினும் தற்போது இரு நாட்டு கடற்படையும் ரோந்தில் ஈடுபட்டுவருகின்றனவாம்.

(சி)

# ● கார் குண்டு வெடிப்பு

# அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன

# உட்பட 25பேர்ஸ்தலத்தில்பலி!

## வாகனங்கள், கடைகள் சேதம்

[கொழும்பு]

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும், பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்ன (59 வயது) உட்பட இருபத்தைந்துபேர் நேற்றுக்காலை 8.30மணியளவில் கொழும்பு ஹவலக் வீதியில் பொலிஸ் பாக் அருகில் இடம்பெற்ற கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தனர். வாகனங்கள், கடைகள் உட்பட பல கட்டிடங்கள் முற்றுக தரைமட்டமாயின.

நேற்றுக் காலை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன தனது பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அரசாங்க உயர் அதிகாரிகளுடன் கோட்டை பிளேசிலுள்ள தமது வீட்டிலிருந்து அலுவலகத்துக்கு காரில் சென்றுகொண்டிருந்தபொழுது ஹவலக் வீதியில் பொலிஸ் பாக் முன்பாக கார் ஒன்றில் வைக்கப்பட்ட சக்திவாய்ந்த குண்டு வெடித்தபோதே இவர்கள் கொல்லப்பட்டனர்.

## சக்திவாய்ந்த குண்டுவெடிப்பு

இவரது வாகனத்துடன் 5 வாகனங்கள் சென்றன. மூன்றுவதாகச் சென்ற வாகனத்தில் அமைச்சர் ரஞ்சன் சென்று கொண்டிருந்தார். குறிப்பிட்ட இடத்திற்கு வந்தபோது வீதியோரத்தில் நின்ற காரொன்றிலிருந்த சக்திவாய்ந்த குண்டு துல்லியமாக 'றிமோற்' கொன்ரோலர் மூலம் இயக்கி வெடிக்கவைக்கப்பட்டது.

அமைச்சரின் வாகனத்திலும், முன்னுக்கும், பின்னும் வாகனங்களிலும் வந்த 6 அதிரடிப் படையினர், 5 பொலிஸார், 7 முக்கிய உயரதிகாரிகளும் பல பொதுமக்களும் கொல்லப்பட்டனர். 75க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். இவர்களில் 50 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரங்களில் சடலங்கள்

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களது சடலங்களும், நொருங்கிப்போன வாகனங்களின் பல பாகங்களும் அருகிலிருந்த கட்டடங்கள், மரங்கள், மின் கம்பங்களில் தொங்கிக் காணப்பட்டன. உடனடியாக அவ்விடம் வந்த தீயணைப்புப் படையினர் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்த 30க்கும் மேற்பட்ட வாகனங்களையும் பல கடைகளையும் அணைத்தனர்.

கொல்லப்பட்ட அமைச்சரதும், பொலிஸ், அதிகாரிகளினதும் சடலங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டு உருக்குலைந்துகருகிய நிலையில் காணப்பட்டதாக நேரடிச் செய்திகள் தெரிவித்தன. அமைச்சரின் உடல், மற்றும் கார்ச் சாரதி, மெய்ப் பாதுகாவலர்களது உடல்களும் உருக்குலைந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நிகழ்ந்த நேரத்தில் போக்குவரத்து அதிகளவில் இருந்ததாலேயே கொல்லப்பட்ட காயமுற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் இது நிலக்கண்ணி வெடித் தாக்குதல் அல்லவென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அருகில் பொலிஸார்

கார்க்குண்டு வெடிப்பு நடைபெற்றபோதும் அதற்கு பலமணி நேரங்களுக்கு முன்பும் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து 76 மீற்றர் தூரத்தில் பாதுகாப்புபடையினர் கடமையில் ஈடுபட்டிருந்ததாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். இதுபற்றியும் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குண்டுவெடிப்பு சத்தம் சுமார் 20 கி மீற்றர் தூரத்திற்கு கேட்டது. சுமார் 2 மைல் தூரம் வரையுள்ள கட்டிடங்கள், வீடுகளின் கண்ணாடிகள் நொருங்கிச் சிதறியது. குண்டுச் சத்தம் கேட்டதும் அந்த இடத்தை நோக்கி தாம் உடனே விரைந்தபோது அப்பகுதியிலிருந்து மக்கள் தலைதெறிக்க ஓடியதை கண்டதாக பி. பி. ஸி. நிருபர் தெரிவித்தார்.

[4-ம் பக்கம் பார்க்க)

## கொலைகளை பார்த்தவரை கொல்ல முயற்சி

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 17-ம் திகதி வங்காலை முகாமில் இராணுவத்தினரால் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை நேரில் பார்த்த மன்னாரைச் சேர்ந்த அருட்திரு அடிகளார் ஒருவரை முஸ்லிம் ஊர்காவல் படையினர் கத்தியால் குத்திக் கொலை செய்ய முயற்சித்துள்ளனர்.

மன்னார் திரும்பிச் செல்லும் போதே இக்கத்திக்குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனினும் அவர் சிறு காயங்களுடன் உயிர்தப்பிவிட்டார்.

(56]

## தமிழ் குழுக்கள் வெளியேறத் தடை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தமிழ் குழுக்களின் உறுப்பினர்கள் அங்கிருந்து வெளியேற தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் திரு ரஞ்சன் விஜயரத்னவின் உத்தரவின் பேரிலேயே பொலிஸார் இந்த தடை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

பெருமளவு பணத்தை சேகரித்துக்கொண்டு இவர்கள் வெளிநாடுகளுக்கு தப்பியோடுவதைதடுக்கவே இந்த நடவடிக்கை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

## திருமலைதமிழர்மீது தாக்குதல் தொடர்கிறது

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் உள்ள கடற்கரைச்சேனையில், தமிழ் மீனவர்களுக்குச் சொந்தமான 60 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளை இராணுவத்தினரும் - முஸ்லிம் ஊர்காவல் படையினரும் எடுத்துச் சென்றுவிட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை வவுனியா நகரப்பகுதியில் நேற்று மூன்றினம் காலையிலிருந்து மாலை வரை புளொட் உறுப்பினர்கள் பொது மக்களை அடிக்கடி அடித்துத் துன்புறுத்திய தாகக் கூறப்படுகின்றது. (வி]

## தமிழர் படும் இன்னல் இந்தியா கவனிப்பதில்லை

(சென்னை)

"இலங்கையில் தமிழர்படும் இன்னல்கள் இந்திய மத்திய அரசு வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கிறது. என்று முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ப சிதம்பரம் தெரிவித்தார். பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இவ்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மீரா 25-வது நாவல்

மீரா வெளியீட்டாளர்களின் இருபத்தி ஐந்தாவது பிரசுரமாக பிரசுரிப்பதற்கு சமகால நிகழ்வுகளை மையமாக கொண்ட நல்லதொரு நாவலை எழுத்தாளர்களிடம் இருந்து வரவேற்கிறோம்.
(சி 4390)

### புத்தகம்

சத்திய சாயிபாபா கூறியபடி அவருடைய முந்திய அவதாரம் ஷிர்டி சாயிபாபா வாழ்க்கை சரித்திரம், கிடைக்குமிடம் ஞானயக்ஞம். 388/1 பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம். (சி-4408)

### கோட் சூட்

திருமண கோட், சூட், வேஸ்ட் கோட் யாவும் எமது கைதேர்ந்த மாஸ்டர் கட்டரால் தற்கால நாகரீகத்துக்கு ஏற்றமுறையில் தைத்துத் தரப்படும் ஜெயபதி சாம் ரெக்ஸ், அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய்.
(சி 4401)

### கொம்பியூட்டர்

கொம்பியூட்டர் Programming in Basic Language 4 மாதங்கள். ஆரம்பம்: 12-03-91. I A. B: (லண்டன்), Shorthand & Typing (பிற்மன்ஸ்) வகுப்புகள் நடைபெறுகின்றன. School of Business Administration, 3-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி-4409)

## அறிவியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கலைமணி சனசமூக நிலையம் நடத்தும் அறிவியல் கருத்தரங்கு இம் மாதம் 8ம் திகதி நடைபெற உள்ளது.

ரி. இருபாகரன், க. யோகராசா ஆகியோர் இக்கருத்தரங்கில் உரையாற்ற உள்ளனர்.

## பயிலுநர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பயிலுநர் ஆசிரியர் சங்க கூட்டம் இன்று பிற்பகல் 3-30 மணியளவில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

## சிறப்புச் சித்தி

(பருத்தித்துறை)

யாழ். கல்வித் திணைக்கள முறைசாரக் கல்விப் பிரிவால் கடந்த வருடம் நடாத்தப்பட்ட ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சு பரீட்சைக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவில் இருந்து தோற்றிய மாணவர்களில் 90 வீத மாணவிகள் சிறப்புச் சித்தியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
(52)

## 2000 ரூபா அபராதப்!

(நாவற்குழி)

சங்கத்தானையைச் சேர்ந்த ஒருவர் தனது வீட்டில் வைத்து 26லீற்றர் மண்ணெண்ணெயை ஒரு போத்தல் 100ரூபா வீதம் விற்றபோது சாவகச்சேரி நகரப் பொறுப்பாளரால் கண்டுபிடிக்கப்பட்டு அவருக்கு 2000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (107)

# நோயாளர்கள் தொகை தினமும் அதிகரிப்பு

(மானிப்பாய்)

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் நோயாளிகள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

இங்கு காலை முதல் நண்பகல் வரை நோயாளிகள் நீண்ட கியூவில் சிகிச்சை பெறுவதற்காக காத்து நிற்கின்றனர்.

இதேவேளை இவ்வைத்தியசாலையில் முக்கிய பல மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் அவற்றை வெளியில் வாங்கிப் பாவிக்குமாறு நோயாளிகள் கேட்கப்படுகின்றனர்.

மேலும் இங்குள்ள வாட்டுகளில் தங்கியிருக்கும் நோயாளிகளும் வெளிக்கடைகளிலேயே மருந்துக் குளிசைகளையும் ஊசி மருந்துகளையும் அதிக விலை கொடுத்து வாங்கிபாவிக்கின்றனர். (71)

# வீட்டுத்தோட்ட போட்டி நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கமத்தொழில் சேவைத் திணைக்களமும், விவசாயத் திணைக்களமும் சேர்ந்து 1991ம் ஆண்டுக்கான வீட்டுத் தோட்டப் போட்டி ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளன.

வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவித்து, உணவுத் தேவையில் தன்னிறைவு அடையும் நோக்கத்துடன் யாழ். மாவட்ட ரீதியிலும், கமத்தொழில் சேவைத் திணைக்கள மட்டத்திலும் இப் போட்டி இடம்பெற உள்ளது.

கமத்தொழிற் சேவை மட்டத்தில் முதலாம் பரிசு ஆயிரம் ரூபாவாகவும், இரண்டாவது பரிசு 750 ரூபாவாகவும், மூன்றாவது பரிசு 500 ரூபாவாகவும் வழங்கப்படவுள்ளது

மாவட்ட ரீதியில் முதலாவது பரிசாக 3,000 ரூபாவும், இரண்டாவது பரிசாக 2,000 ரூபாவும், மூன்றாவது பரிசாக 1,000 ரூபாவும் வழங்கப்படும். (152,

# பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரி பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மூன்றாவது வருடப் பௌதீக விஞ்ஞானப் பரீட்சையில் (1989 அநுபந்தம்) சித்தியடைந்தவர்களின் முடிவுகள் அண்மையில் வெளியாகியுள்ளன.

இப்பரீட்சையில் சித்தியடைந்தோர்: விபரம் வருமாறு; எம். திருநாதன், செல்விகள் எம்.சிவராணி, எஸ்.ராதிகா.

விஞ்ஞானப் பொதுப் பட்டதாரிப் பரீட்சை (1989 அநுபந்தம்) இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் செல்வி எம். சிவராணி, இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவில் எம். திருநாதன். சாதாரணசித்தி: எஸ். ராதிகா

விசேட விஞ்ஞானப் பட்டதாரி 1989 பரீட்சை கணிதவியல் இரண்டாம் வகுப்பு உயர் பிரிவில் செல்வி எஸ். ரஞ்சினி, எஸ். செல்வராஜன்.

இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவு: எம். அரவிந்தன், செல்விகள் ரி. ஞானலோகதயாபரிஅம்பலவ், ஆர். சுகந்தினி.

சாதாரணசித்தி: செல்விகள் எஸ். சித்ரா, எம் கலாதேவி.

விசேஷ கணிதவியல் பட்டதாரி கணிதவியல் பரீட்சை 1989ல் அதிக புள்ளிகள் பெற்று முதல்தரமாக வந்த செல்வி எஸ். ரஞ்சினி, சேர் அருணாசலம் மகாதேவா ஞாபகார்த்தப் பரிசைப் பெற்றுள்ளார்.

புள்ளி விபரவியல் இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவு: செல்விகள் எஸ். யாமினி, எஸ். கௌசல்யா, என். நாகேஸ்வரி, ஆர் ரவிமோகன்

சாதாரண சித்தி: எல். பி. ஈ. உதயகுமாரன்.

விசேஷ விஞ்ஞானப் பட்டதாரி விலங்கியல 1989 பரீட்சை இரண்டாம் வகுப்பு மேற்பிரிவு; கே. ஜெயசிங்கம்.

இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவு; செல்விகள் என். அனிதாகினி, ஈ. வசந்தகுமாரி.

சேர் சங்கரப்பிள்ளை பரராஜசிங்கம் புலமைப்பரிசில் (விலங்கியல்) திரு. கே. ஜெயசிங்கம் பெற்றுள்ளார். (153)

# சனசமூக நிலையங்கள் யாழ். இந்துவில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சனசமூகநிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை இம்மாதம் 5ம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரிமண்டபத்தில், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ராஜன் சந்திக்க இருக்கிறார்.

இக்கூட்டத்தில் முக்கியமான விடயங்கள் பற்றி ஆலோசிக்கப்பட விருப்பதால் மேற்குறிப்பிட்டவர்கள் தவறாது சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (153)

# அரச, எதிர்க்கட்சிகள் இணைந்து செயற்படவேண்டும்

(மாங்குளம்)

நாட்டின் முன்னேற்றம், மக்களின் நலன் ஆகியவற்றைக் கருதியும் முக்கியமான பிரச்சனைகளின் போதும், நெருக்கடியின்போதும் அரசாங்கக் கட்சியும், எதிர்க்கட்சியும் இணைந்து செயல்பட வேண்டும்.

இவ்வாறு விடமைப்பு இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது 1971 ம் ஆண்டில் ஏற்பட்ட கிளர்ச்சியின்போது அப்போதைய அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சிபூரண ஒத்துழைப்பை வழங்கியது. நாட்டில் இன்று தோன்றியுள்ள பிரச்சனைக்குஜன நாயகரீதியில் தீர்வுகாண அனைவரும் கட்சி பேதங்களை மறந்து ஒத்துழைக்க வேண்டும் என்றார்
(150,

பரு. ஆஸ்பத்திரி ஊழியர்

# கோல உடையுடன் அடையாள அட்டையையும் தரித்திருக்க வேண்டும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு விஜயம் செய்த யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் அத்தியட்சகர் திரு. என். கனகசபை வைத்தியசாலை ஊழியர்கள் கடமை நேரத்தில் கோல உடையணிந்திருப்பதுடன் உத்தியோக அடையாள அட்டையையும் தரித்திருக்க வேண்டுமென கடுமையான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் நிலவும் சீர்கேடுகள்பற்றி யாழ் மாவட்ட சுகாதார சேவைகள் அத்தியட்சகருக்குப் பலத்த புகார்கள் கிடைத்ததையடுத்து சுகாதார சேவைகள் அத்தியட்கர் இச்சீர்கேடுகள் பற்றிக் கண்காணிப்பதற்காக வைத்தியசாலைக்குக் கடந்த செவ்வாய்க்கிழமை நேரடி விஜயம் செய்தார்.

இதனையடுத்து வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ் கதிரவேற்பிள்ளை உட்பட வைத்தியசாலை நிர்வாகத்துடன் கலந்துரையாடினார். (52)

## வெற்றி தோல்வி இல்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்திற்கும், உருத்திரபுரம் புனித பற்றிமா பாடசாலைக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் தலா ஒரு கோல் போட்டு வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

திரு. நேசஜேசுதாசன் கென்னடி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (83)

## மாசிமக விழா

(பளை)

கற்குழி கந்தசுவாமி கோவிலில் மாசிமக விழா சாவகச்சேரி திவ்விய ஜீவன சங்கத்தினரால் கொண்டாடப்பட்டது.

நீதிபதி எஸ். திருநாவுக்கரசு, சு. சோதிநாதன் உட்பட பலர் மாசிமகத் தின் பெருமைகளைப் பற்றி சிறப்புரையாற்றினர்.

## 10 பேர் ஓய்வுபெற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கமத்தொழில் சேவைத் திணைகளத்தில் சுயஇளைப்பாற்றுத் திட்டத்தின் கீழ் 10 பேர் ஓய்வுபெற்றுள்ளனர். (152)

## பிணை கொடுக்க மறுப்பு

(மாங்குளம்)

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கிலுள்ள வீடுகளைப் புனரமைப்பதற்கு தேவைப்படும் நிதியைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பிணையாகக் கொடுக்க மறுத்துள்ளது.

## சர்வகட்சி மகாநாடு

(கொழும்பு)

சர்வகட்சிகளின் மகாநாடு ஜனாதிபதிசெயலகத்தில்நேற்று முன்தினம் நடைபெற்றது.

அனைத்து அரசியல் கட்சிகளும் சில தமிழ் குழுக்களின் பிரதிநிதிகளும்இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இம் மாதம் 5-ம் திகதி மீண்டும் இம்மாநாடு கூட்டப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## கள், கசிப்பு கைப்பற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யா. தெ. ப. பொ. கூ. சங்க விஸ்தரிப்பு உத்தியோகத்தர் சங்க மேற்பார்வையாளர் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் ஆகியோர் நடத்திய தேடுதலின் போது வெள்ளாந் தெருவில் ஒரு வீட்டில் 15 போத்தல் கசிப்பும் பற்றிக்ஸ் வீதியில் உள்ள இரு வீட்டிலிருந்து 25 போத்தல் கள்ளும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

## 10 லட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ். இந்துக்கல்லூரிக்கு 10 இலட்சம் ரூபாநிதிகிடைத்துள்ளது. (153)

## மண்மீட்பு நிதி

(பளை)

பளைப்பகுதியில் உள்ள சகல கிராமசேவை அலுவலர் பிரிவிலும் மண்மீட்புநிதி பெறுவதற்கான நடவடிக்கைகள் அந்தந்தப்பகுதி சிற்றார் அவைகளினுல் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## பாதயாத்திரை

(நாவற்குழி)

நாட்டின் அமைதிக்காக தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தினரின் பேரணியொன்று சாவகச்சேரியிலிருந்து வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்கு பாதயாத்திரை மேற்கொண்டனர்.

## முதலுதவிச் சிகிச்சை நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ராசாவின் தோட்டம் வீதியில் அமைந்துள்ள சனசமூகநிலையக் கட்டடத்தில் முதலுதவிச் சிகிச்சை நிலையம் ஒன்று இயங்கிவருகிறது. (59)

## ஓய்வு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் 14 வருடங்களாக தொடர்ந்து அதிபராகக் கடமையாற்றிய திரு. வி. நாகராசா கடந்த மாதம் தொடக்கம் பதவியிலிருந்து ஓய்வுபெற்றார். (74)

## "கலை இளவல்" பட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து சாரணர் துருப்புத் தலைவர் செல்வன் கோ. சத்தியனுக்கு யாழ். இந்துக்கல்லூரி, கலைஇளவல் பட்டம் வழங்கி கௌரவித்தது. சாரணிய ஸ்தாபகர் தினத்தைக் கொண்டாடிய போது கல்லூரி அதிபர் திரு. கே. எஸ். குகதாசன் கௌரவ சின்னத்தை அணிவித்து கௌரவித்தார்.

## திருட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரடிப்போக்கில் சாராய பார் ஒன்று உடைத்து திருடப்பட்டுள்ளது. (83)

## நினைவுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை சிவயோக சமாசத்திலும், பன்குளக் குடியிலும், நடராசபுரத்திலும் ஐரோப்பியர் பலரை ஆட்கொண்ட ஸ்ரீமத் சுவாமி கங்காதரசுந்தரஜி அண்மையில் மகாசமாதி அடைந்ததை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நினைவுக் கூட்டம் நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கலாநிதி க. கனகராசா, க சி. குலரத்தினம் ஆகியோர் சுவாமிகளின் சாதனை பற்றி உரையாற்றினர்.

## ''விளையாட்டின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர் அமரர் குமரையா''



(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர் அமரர் ஈ. ஜே. குமரையா; கலை உலகிலும் இவர் சிறந்து விளங்கியவர்''.

இவ்வாறு யாழ்ப்பாணம் சென். பத்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிரான்ஸிஸ் ஜோசப் அமரர் குமரையாவின் உருவப்படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்;

தலைவர்: டாக்டர் ஜே. பி. பிலிப், காரியதரிசி: கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, தனதிகாரி: எஸ். ரி. கணநாதன், உப தலைவர்கள்: ஏ. செபஸ்தியாம்பிள்ளை, எஸ். சிவகுரு வெடிற்ராதா, பி. எவ். சேவியர், ஜே. யதுகுலசிங், ஜி. எம். செயஸ்தியாம்பிள்ளை உபசெயலாளர்; பி. ஆர். தம்பிநாயகம். (கி)

## ''வடக்கு-கிழக்கு பயிலுநர் ஆசிரியருக்கு 300 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும்''

(பருத்தித்துறை)

இலங்கையின் ஏனைய பகுதிகளின் பயிலுநர் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 300 ரூபா சம்பள உயர்வை வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள பயிலுநர் ஆசிரியர்களுக்கும் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு வடமராட்சி பயிலுநர் ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளர் திரு. ஸ்ரீசந்திரன் கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நாட்டில் நியமிக்கப்பட்டுள்ள சகல பயிலுநர் ஆசிரியர்களுக்கும் 1990-91ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள 300 ரூபா சம்பள உயர்வு வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள பயிலுநர் ஆசிரியர்களுக்கு இன்று வரை வழங்கப்படவில்லை இச்சம்பள உயர்வு கடந்த வருடம் கார்த்திகை மாதத்திலிருந்து வழங்கப்படவேண்டியதாகும் கடந்த மூன்றுமாதங்களாக இச்சம்பள உயர்வை வழங்காமல் இருப்பதனால் வடக்கு கிழக்கு பயிலுநர் ஆசிரியர்கள் பலத்த கவலையும், பாதிப்பும் அடைந்துள்ளார்கள். எனவே இப்பயிலுநர் ஆசிரியர்களுக்கும் இச்சம்பள உயர்வை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர், யாழ். கல்விப்பணிப்பாளர் ஆகியோருக்கும் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன. (53)

## மண்ணெண்ணை, உரம் வழங்க நடவடிக்கை

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டைப் பகுதி விவசாயிகளுக்கு உரம், மண்ணெண்ணை, விதை தானியங்கள் என்பவற்றை வழங்க கிராமிய உற்பத்திக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ் உதவிகளை புனர்வாழ்வு நிறுவனம் வழங்க முன்வந்துள்ளதாக ஆனைக்கோட்டை கிராமிய உற்பத்திக் குழுத் தலைவர் திரு சவுந்தரராசன் தெரிவித்துள்ளார். [71]

## உணவு முத்திரைக்கு பால்மா விநியோகம்

(சித்தன்கேணி)

காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தினர் உணவு முத்திரைக்கு பால்மா வகைகளை விநியோகிக்கின்றனர்.

காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தினர் 6ம் இலக்க உணவு முத்திரைக்கு அங்கர், நெஸ்பிறே, லக்டோசன் போன்ற பால்மா வகைகளை விநியோகிக்கின்றனர். (137)

## மரக்கறி விலை சரிவு!

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தையில் மரக்கறிகளின் விலைகள் கணிசமான அளவுக்கு குறைந்துள்ளன. தக்காளி, பயிற்றங்காய், பாகற்காய், வெங்காயப்பிடி என்பன மலிவு விலையில் பெறக்கூடியதாக இருக்கிறது. (72)

## யாழ். மாவட்டத்தில் 4மாதிரி கிராமங்கள்

(சித்தன்கேணி)

சங்கானை, சோப்பாய் உ. அ. அதிபர் பிரிவுகளிலுள்ள நான்கு கிராமங்கள் மாதிரிக் கிராமங்களாக தெரிவுசெய்யப்பட்டு வடக்கு கிழக்கு மாகாண அரசின் திட்டமிடல் இளைஞர் விவகார மனிதவள அமைச்சினால் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை யாழ். அரசாங்க செயலக திட்டமிடல்பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்த நான்கு கிராமங்களின் மூலவளங்கள் சமூக பொருளாதார நிலை முன்னுரிமைகள் ஆகிய விபரங்களை அந்த அந்த உதவி அரசாங்க அதிபர்களிடம் வடக்கு-கிழக்கு மாகாண அரசு கோரியுள்ளது. (137)

## சட்டப்பேரவை தேர்தல் வேட்பாளர்கள் மனு

(சென்னை)

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட விரும்பும் ஜனதா தள் சோஷலிசக் கட்சியினரிடமிருந்து இன்று முதல் இம்மாதம் 10-ஆம் திகதி வரை இக் கட்சியின் காரியாலயத்தில் மனுக்கள் பெறப்படுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

இம்மாதம் 3-வது வாரத்தில் அ. இ. அ. தி. மு. க, காங்கிரஸ் கட்சி, ஜனதா தள் சோஷலிஸ்ட் கட்சி கூட்டணி வேட்பாளர் பட்டியல் இறுதியாக்கப்படுமெனக் கூறப்படுகிறது.

தற்போது அந்தந்தக் கட்சிகள் தங்கள் அபேட்சகர்கள் பற்றி பட்டியல் தயாரிப்பதில் ஈடுபட்டுவருகின்றனர்.

## பொது அறிவு வெளியீட்டு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தேனருவி சஞ்சிகை குழுவினரின் பொது அறிவு நூல் வெளியீட்டுவிழா பருத்தித்துறை வசந்தம் அரங்கில் நடைபெற்றது.

சமூகசேவை அதிகாரி திரு ரீ. கிபாகரன் ஆசிரியர் வி. விக்னேஸ்வரனிடமிருந்து பொது அறிவு நூலின் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார். ஆசிரியர் திரு சு. ரஞ்சன் நூல் விமர்சன உரையை நிகழ்த்தினார். (52)

## இராசிபலன்

03-03-1991

ஞாயிறுக்கிழமை

அத்தம் மு. இ 8-09 வரை, திருதியை மு. இ. 11-12 வரை, அமிர்த சித்தயோகம், இராகுகாலம் மாலை 4-57 முதல் 6-27 வரை, நல்ல நேரம் 8-54 முதல் 9-32 வரை,

மேடம்: திருமணப் பேச்சு, நண்பர்கள் உல்லாசம், தொழில் பாராட்டு.

இடபம்: மனக் களிப்பு, பணியாளர் சகாயம், காரிய தாமதம், தியாகம்.

மிதுனம்: வேண்டாதநட்பு, தப்பபிப்பிராயம், மனக்குறை

கடகம்: பெரியோர் ஆசி தொழில் முயற்சி, குடும்ப நன்மை புகழ்

சிங்கம்: இனசனப்பகை, நிம்மதியற்ற போக்கு, அதிகாரிகள் சினம்.

கன்னி: அகம்பாவம், காரிய சித்தி, மாமியார் புகழ், தெய்வ தரிசனம்.

துலாம்: கடுகடுப்பு, ஒய்வின்மை, அகால போஜனம், தொழில் போட்டி.

விருச்சிகம்; பிறர் உதவி, பயணங்களால் அனுகூலம், கடமை உணர்வு.

தனுசு: புதிய யோசனை: மறைமுக எதிர்ப்பு, குடும்ப தொல்லை.

மகரம்: உறவினர் வருகை. ஆடம்பரசெலவு தொழில் லாபம்.

கும்பம்: முறை தவறுதல், கடும் சினம், பழைய சிந்தனை, கவலை மிகுதி.

மீனம்: அதிக பிரசங்கம், தொழில்மாற்றம், குடும்ப உல்லாசம்.

ஜோஸ்யர்

## சகல துறைகளிலும் சேவை ஆற்றிவரும் ஒரு பெரியார்

(சாவகச்சேரி)

''மனிதவளர்ச்சிக்கு உதவக்கூடிய சகல துறைகளிலும் பெரும் சேவையாற்றிவரும் ஒரு பெரியார் கலாநிதி க. கனகராசா'' என்று அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் திரு. கே. கோபால கிருஷ்ணன் தெரிவித்தார்

தொழில் அதிபர் க. கனகராசா யோகக்கலையில் டாக்டர் பட்டம் பெற்றமையைக் கௌரவித்து அறவழிப் போராட்டக்குழுவினால் நடாத்தப்பட்ட கௌரவிப்பு வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

''தொழில் அதிபர்கள் எல்லாம் கனகராசாவைப்போல் தொண்டாற்றினால் எமது நாடு பலவழிகளிலும் முன்னேற்றம் அடையும் பெரியார் அவர்கள் தமிழினத்திற்கு கிடைத்த அரும் சொத்து இத்தகைய சிறப்பு வாய்ந்த ஒருவருக்கு கலாநிதி பட்டம் கிடைத்தமை சிறப்பிற்குரியதாகும்'' என்றும் அவர் மேலும் கூறினார்.

தென்மராட்சி உ. அ. அதிபர் பீ. சுந்தரம்பிள்ளை, சாவகச்சேரி நகரசபை செயலாளர் த. நவரத்தினராசா, அபேர்கு இயக்குனர்கள் ச. தங்கராசா, வீ. ஜீ. தங்கவேல், தெ.மே. ப. நோ. கூ. சங்க தலைவர் ப. செல்லத்துரை, டாக்டர் பே. பீலிக்ஸ், க. இளையதம்பி, க. ஜீவதாஸ் உட்பட பலர் அன்னாரின் சேவைகளைப் பாராட்டிப் பேசினார்கள்.

தொழிலதிபரின் சேவையைப் பாராட்டி அறவழி குழுவினரால் பாராட்டுப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்டது.

## உணவுப் பொருள்கள்

(பளை)

பளைப் பகுதியிலுள்ள உணவு முத்திரை பெறுவோருக்கு முத்திரைக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் உணவு முத்திரை இல்லாதோருக்கு உணவுப் பொருள்கள் பணத்திற்கு விநியோகிக்கப்படவுள்ளதாக பளை உதவி அரசாங்க அதிபர் சு. கந்தசாமி தெரிவித்தார்.

## ஏற்பூசிக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையின் வெளி நோயாளர் பகுதியில் ஏற்றப்படும் ஏற்பூசி மருந்துகள் முடிவடைந்துவிட்டன

அங்குள்ள வார்ட்டுகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கே தற்போது ஊசி போடப்படுகிறது. (56)

## வீரவேங்கை பாலன் 2ம் ஆண்டு நினைவு

(நாவற்குழி)

வீரவேங்கை பாலனின் 2ம் ஆண்டு நினைவாக, வரணி காம்பைக்குறிச்சி செல்வா விளையாட்டுக்கழகம் மெய்வல்லுனர் போட்டியும், கரபந்தாட்டப் போட்டியும் நடாத்தியது.

மெய்வல்லுனர் போட்டியில் 131 புள்ளிகளைப் பெற்று வரணி மத்திய சனசமூகநிலையம் முதலாவது இடத்தையும் 108 புள்ளிகளைப் பெற்று செல்வா விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது.

கரபந்தாட்டப் போட்டியில் வரணி இளைஞர் கழகம் முதலாமிடத்தைப் பெற்றது.

வெற்றிபெற்ற வீரர்களுக்கு விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட நிதிப் பொறுப்பாளர் திரு. ரவி பரிசில் வழங்கினார்.

இவ் விழாவில் யாழ். மாவட்ட பிரச்சாரப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர், யாழ் மாவட்ட தளபதி திரு. தினேஸ், தென்மராட்சி பிரிவு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பாப்பா, கொடிகாமம் வட்டப்பொறுப்பாளர் திரு. இராகுலன் ஆகியோர் பங்குபற்றினார்கள். (107)

## ஆண்டு விழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு சென். றேசறி சிக்கனக் கடன் கூட்டுறவு ஐக்கிய நாணய சங்கத்தின் 36வது ஆண்டு நிறைவு விழா சங்கத்தலைவி அப்புறேஸ்-பிரகாசி தலைமையில் உயரப்புலம் சர்வவோதய மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் புங்குடுதீவு சவேரியார் ஆலயப் பங்குத்தந்தை அருள்திரு யேசுதாசன் அடிகள், புங்குடுதீவு பொறுப்பாளர் ஆனந், யாழ் மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தர் செல்வி லோகேஸ்வரி ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

## மாணவர் அமைப்பு உதவி

(நாவற்குழி)

தென்மராட்சியிலுள்ள அகதிகளின் பிள்ளைகள், போராளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள், ஏழைப்பிள்ளைகள் ஆகிய 500 பிள்ளைகளுக்குசாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கம் தென்மராட்சி மாணவர் அமைப்பு மூலமாக கொப்பிகள், பென்சில், றேசர் என்பன இலவசமாக வழங்கியுள்ளது. (107)

## கடன் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இடைப்போகத்தில் எள்ளு, உழுந்து, பயறு போன்ற சிறுதானிய வகைகள் பயிரிடுவதற்கு இலங்கை வங்கிமூலம் யாழ். மாவட்ட கமத்தொழில் சேவைத்திணைக்களத்தினர் விவசாயிகளுக்கு கடன்வழங்க தீர்மானித்துள்ளார்கள்.

இந்த ஊக்குவிப்போடு இம்முறை யாழ். மாவட்டத்தில் 6000 ஹெக்ரர் நிலத்தில் இச்சிறுதானிய வகைகள் பயிரிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (152)

# கார் குண்டு வெடிப்பு

(1-ம் பக்க தொடர்ச்சி)

சம்பவம் நடைபெற்ற சிலமணி நேரத்தினுள் அவ்விடத்திலும் கொழும்பு நகர்ப் பகுதியிலும் ஆயிரக்கணக்கான முப்படையினரும் வீதியெங்கும் காணப்பட்டனர். வாகனங்கள், தடுத்துச் சோதனைகள் போடப்பட்டன.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சுமார் 2 மணி நேரத்தின் பின்வந்த ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா சகல பகுதிகளையும் பார்வையிட்டார். பின் அமைச்சரின் வீட்டிற்குசென்று அவரது மனைவியிடமும், ஒரே மகனிடமும் தனது அனுதாபத்தை தெரிவித்தார். அமைச்சர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், எம் பி. க்கள் வெளிநாட்டு இராஜதந்திரிகள் அமைச்சரின் வீட்டிற்கு சென்று அனுதாபம் தெரிவித்தனர்.

இதுபற்றி உடனடியாக பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா தலைமையில் நேரடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். மேலும் இந்தச் சம்பவத்தில் மக்கள் அனைவரும் அமைதியாக இருக்குமாறும் வன்முறை, குழப்பத்தில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

# ஜெனரல் ரஞ்சனுக்கு கௌரவம்

அமைச்சர் ரஞ்சனின் சேவையைப் பாராட்டி அவருக்கு இறப்பின் பின்னர் 'ஜெனரல்' பட்டம் வழங்கப்பட்டுள்ளதுடன் புதன்கிழமை சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ள இறுதிச் சடங்கை அரச, இராணுவ பூரண மரியாதையுடன் நடாத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்காக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தலைமையிலான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

# கொலையாளிகள் பற்றி சர்ச்சை

இச்சம்பவத்திற்கு இதுவரை எவரும் உரிமை கோராதபோதும் இக்கொலையை யார் செய்திருப்பார்கள் என்பது பற்றிப் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளதாக பி. பி. ஸி தெரிவித்தது. இக்கொலையை தமிழ் தீவிரவாதிகள் அல்லது ஜே வி. பி அல்லது அமைச்சரினால் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்ட சீன, சிங்கப்பூரைச் சேர்ந்த சூதாட்ட, களியாட்ட விடுதிக்காரர்கள் அல்லது வெளிநாட்டுச் சக்திகள் பிரச்சினையைச் சிக்கலாக்கக் கொலைகள் புரிந்திருக்கலாமென்றும் பி. பி. ஸி தெரிவித்தது.

ஐ. தே. கட்சியின் மூன்றாவது பொதுச்செயலாளரான திரு. ரஞ்சன் கொலைசெய்யப்பட்டுள்ளார். இவர் தமது 60தாவது பிறந்த நாளைக் கொண்டாட இன்னும் ஒரு மாதமிருந்தது. இவர் முன்னாள் பிரதமர் திரு. டி. எஸ் சேனநாயக்காவின் ஒன்றுவிட்ட சகோதரியின் மகனாவார்.

நேற்றிரவு ஜனாதிபதி கொழும்பு பெரியாஸ்பத்திரி சென்று உருக்குலைந்து கருகிய நிலையில் காணப்பட்ட அமைச்சரினதும், ஏனையோரினதும் சடலங்களை பார்வையிட்டார். மூடப்பட்ட பேழையில் வைக்கப்படும் அமைச்சர் ரஞ்சனின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று காலை 8 மணிக்கு அவரது 'கோல்டன் பிளேஸ்' இல்லத்தில் வைக்கப்படும்.

அமைச்சர் ரஞ்சனின் கொலை குறித்து இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் பலத்த அதிர்ச்சி தெரிவித்துள்ளதுடன் இதனை வன்மையாக கண்டித்துள்ளார். வேறு சில நாடுகளும் இதுகுறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ளன.

அமைச்சர் ரஞ்சனின் கொலையை ஒருவர் அல்லது இருவர் 'ரிமோட் கொன்ரோலர்' மூலம் மேற்கொண்டிருக்கலாம் என்றும் எனினும் இது குறித்து விபரமாக எதுவும் உடனடியாக கூறமுடியாதுள்ளதாகவும் இது மிகத்திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அரசுக்கு பெரும் நெருக்கடி

இக்கொலை இலங்கை அரசுக்கும், ஜனாதிபதிக்கும் பெரும் அடியாகியிருப்பதாகவும் இதன் மூலம் பல அமைச்சர்கள் பெரும் அச்சமடைந்திருப்பதாகவும் இலங்கைப் பிரச்சனையில் புதிய திருப்பம் ஒன்று ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரித்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் ரஞ்சன் கடைசியாக வடக்கில் மடுமாதா ஆலயத்திலிருந்து ஆயிரக்கணக்கான அகதிகளை துரத்தியதும் அதற்கு மனிதாபிமானமற்ற முறையில் ஒருகாரணம் கூறியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் குறித்து தமக்கு எதுவும் தெரியாதென்றும் இதுபற்றி யாழ்ப்பாணத்துடன் தொடர்புகொண்டபின்பே தம்மால் எதுவித கருத்தும் தெரிவிக்கமுடியுமென லண்டனிலிருந்து விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) தெரிவித்துள்ளார்.

# நேரில் பார்த்தவர் தகவல்

இச்சம்பவத்தை நேரில் பார்த்த 'சண்டே ரைம்ஸ்' முன்னாள் ஆசிரியர் தெரிவிக்கையில்: திடீரென பாரிய குண்டுவெடிப்பு சத்தம் கேட்டது. வீட்டின் கண்ணாடி யன்னல்கள் ஓடுகள் சிதறின. உடனே வெளியில் வந்து பார்த்தேன் எங்கும் ஒரே புகைமயம். மின்கம்பத்தின் மேலே அமைச்சர் ரஞ்சனின் வெள்ளை நிற காரின் கதவு தொங்கிக்கொண்டிருந்தது. அவரது கார் சின்னாபின்னமாயிருந்தது. காரினுள்ளே வெள்ளை நிற உடைகள் ரத்தமயமாகிய நிலையில் இரு சடலங்கள் காணப்பட்டன. அதில் ஒன்று அமைச்சரின் சடலமென சொன்னார்கள். அவ்விடத்திற்கு அருகில் அமைச்சரின் உறவினர்கள் கதறியழுத வண்ணம் காணப்பட்டனர். பஸ் ஒன்று கொழுந்துவிட்டெரிந்து முடியும் நிலையிலிருந்தது. உடனடியாக அவ்விடத்திற்கு பொலிஸ் அணிகள் திரண்டுவந்தன. வீதியும் அவ்விடமும் யாரும் செல்லமுடியாது தடைசெய்யப்பட்டது.

அமைச்சர் ரஞ்சன் காரிலேயே சக்திமிக்க வெடிகுண்டு வெடித்ததாக 'வெரிதாஸ்' தெரிவித்தது. எனினும் இதனை பொலிசார் மறுத்துள்ளனர். அமைச்சருடன் சென்ற கடற்படை தளபதி ஒருவரும் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு சென். தோமஸ் கல்லூரியின் பழைய மாணவரான அமைச்சர் ரஞ்சன் 17 வயதிலேயே ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொண்டார். 19 வயதில் தோட்டத்துறை அமைச்சில் உயர் பதவிகளை வகித்தார்.

# பிரேமாவின் 'வலதுகை'

1977 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். அதன்பின் ஐ. தே. கட்சியில் பல முக்கிய பதவிகளை வகித்துவந்தார். 1989-இல் ஐ. தே. கட்சிச் செயலாளர் திரு. ஹர்ஸா அபேவர்தன ஜே வி. பி. யால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கட்சியின் செயலாளராக நியமிக்கப்பட்டார். திரு பிரேமதாசா ஜனாதிபதியானபின் அவருக்கு அடுத்தபடியாகக் கருதப்பட்டு வந்தார். தேசிய பட்டியலின் மூலம் நியமன எம். பியான அமைச்சர் முதலில் வெளிவிவகார அமைச்சராகவும், பாதுகாப்பு இணையமைச்சராகவும் கடமையாற்றினார். பின்னர் நடந்த அமைச்சரவை மாற்றத்தில் தோட்டத் தொழில்துறை அமைச்சராகவும் பாதுகாப்பு இணையமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். இக்காலப் பகுதியில் அரசின் பேச்சாளராகவும் இருந்து வந்தார். இந்திய அமைதிப்படை வெளியேற்றப்படவேண்டுமென தீவிரமாயிருந்தவர்களில் இவரும் ஒருவர். கடந்த வருடம் யூனில் ஆரம்பமான விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களுக்கு இவரே பொறுப்பேற்று நடத்தி வந்ததும் தெரிந்ததே.

## யாழ். குடாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற விமானத்தாக்குதலில் ஐவர் காயமடைந்தனர். நாகம்மா கணபதிப்பிள்ளை ('80-வயது), திலகவதி வேலுப்பிள்ளை (28-வயது) மன்னாரைச் சேர்ந்தவர், கோப்பாய் ஆசிரியப்பயிற்சிக்கல்லூரி ஆசிரியை இருவரும் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வீதியில் வீழ்ந்த குண்டுகளால் 7 வீடுகள் சேதமுற்றன. ஒருகுண்டு வெடிக்காத நிலையில் உள்ளது.

கல்வியங்காடு காசிப்பிள்ளை வித்தியாலயம் மீது 2 குண்டுகள் வீசப்பட்டதில் பல வகுப்பறைகள் கடுமையாக சேதமுற்றன. அதிபர் அலுவலகமும், பிரதான மண்டபமும் மாடிக்கட்டிடமும் சேதமுற்றன.

கோண்டாவில் கிழக்கு ஸ்ரேசன் வீதி பிரபாகரன் வீட்டில் நேற்றுக்காலை 10 மணியளவில் இடம் பெற்ற பொம்மர் விமானக்குண்டு வீச்சில் அதேயிடத்தை சேர்ந்த திருமதிகள் சு. இரத்தினம்மா (60 வயது), சு. செல்வமணி (50 வயது), திரு. சுந்தரம் (60 வயது) ஆகியோர் காயமடைந்தனர். இரண்டு பொம்மர் விமானங்கள் இரு குண்டுகளை வீடுகளை நோக்கி வீசியதில் மூன்று வீடுகளும் தரைமட்டமாகியதுடன் மேலும் ஆறுவீடுகள் சேதமடைந்தன.

சு. இரத்தினம்மா, சு செல்வமணி, சு. சுந்தரம், சுப்பிரமணியம், இராஜேந்திரம் ஆகியோரின் வீடுகள் சேதமுற்றன.

இதேவேளை அளவெட்டியில் 2 பொம்மர்கள் 4 குண்டுகளை வீசியதில் ஐந்து வீடுகள் சேதமுற்றன. (56-1?2)

## வர்த்தகர்கள் கடத்தல்

(கொழும்பு)

யாழ்ப்பாண வர்த்தகர்கள் பலர் கொழும்பில் கடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் இடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

இனம் தெரியாத ஆயுதக் குழுக்களினால் இவர்கள் கடந்த வாரம் கடத்தப்பட்டுள்ளதாகவும் இதுவரை அவர்கள் விடுவிக்கப் படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வீரமரணம்

[யாழ்ப்பாணம்]

விமன்காமம் பகுதியில் இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் புலிகள் தரப்பில் கப்டன் ரகிம் (கருணாகரன் - அராலி தெற்கு) வீரமரணமடைந்தார்.

நேற்றுமுன்தினமிரவு ஆனையிறவுப்பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் லெப். சுதாங்கனி (தில்லையம்பலம் சுதா - வட்டக்கச்சி) வீரமரணமடைந்தார்.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர்.

(வி)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி விஸ்வநாதன்

[ஓய்வுபெற்ற ஆசிரியர், கட்டுடை மகாவித்தியாலயம்]

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் தற்பொழுது உடுவில் கிழக்கில் வசிப்பவருமாகிய சின்னத்தம்பி விஸ்வநாதன் [ஓய்வுபெற்ற ஆசிரியர், கட்டுடை மகாவித்தியாலயம்] 02-03-91 அன்று காலமாகிவிட்டார் அன்னார் மரகதவல்லியின் அன்புக்கணவரும், மோகன், (பிரான்ஸ்), வனஜா, விஜயராணி, விக்கினராஜா (விக்கிளு-பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத்தந்தையும், காமாட்சி, குலதுங்கம், காலஞ்சென்ற விசாலாட்சி, வேலாயுதம், மீனாட்சி, பரமேஸ்வரி, விஜசித்தம்பி, புவனேஸ்வரி, காசிநாதன் ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை (ஞாயிற்றுக்கிழமை) 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பூவோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
திருமதி ம. விஸ்வநாதன்
(மனைவி)

(இ 4414)

## நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

[முன்னாள் எம். டி குணசேன பிரதம கணக்காளர்]

பெரியவிளான் இளவாலையைச் சேர்ந்த முன்னைநாள் எம். டி குணசேன பிரதம கணக்காளர் நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை 24-02-91ல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற தருமர் நீக்கிலாப்பிள்ளை ஞானப்பு தம்பதிகளின் அன்பு மகனும், மரியரத்தினத்தின் அன்புக்கணவரும், திருமதி றெஜீனா ரிறேஸ் [B A. Hons], L. L B. சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிஸ் நியாயதுரந்தரர் [Solicitor - London], அன்ரன் பேட்றம் [பொறியியலாளர் - கனடா], திரு திலிடா ஞானசேகரம் [தட்டெழுத்தாளர், கொழும்பு], திருமதி டாக்டர் றஞ்சினி நவரத்தினசிங்கம் [கனடா]. வின் சென்ற் ஜோர்ஜ் அந்தோனிப்பிள்ளை [பொறியியலாளர், கனடா], ஆகியோரின் அன்புத்தந்தையும், ரிறேஸ் கோல்ரன் [பொறியியலாளர், லண்டன்], திருமதி சித்திரா அன்ரன் பேட்றம் [கணக்காளர், கனடா] சந்தியாப்பிள்ளை ஞானசேகரம் [மாவட்ட மருந்தாளர் கம்பஹா - கொழும்பு], வேலுப்பிள்ளை நவரத்தினசிங்கம் [கனடா], திருமதி மங்களா வின்சன்ட் ஜோர்ஜ் [பட்டதாரி கனடா], ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரது பூதவுடல் நல்லடக்கத்திற்காக பெரியவிளான் இளவாலையைச்சேர்ந்த சட்டத்தரணி திருமதி றெஜீனா ரிறேஸ் அவர்களின் இல்லத்திலிருந்து [04-03-91] நாளை திங்கட்கிழமை மாலை மூன்றுமணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு புனித யுவானியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
திருமதி றெஜீனா ரிறேஸ்
[சட்டத்தரணி]

பெரியவிளான்,
இளவாலை

[இ 4413]

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் இலக்கம் 68 கே. கே. எஸ் வீதி, இலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு மார்ச் மாதம் 3ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a New Paper at the General Post Office Sri Lanka under number Q/100106/81.

## தமிழர்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வாறு கூறினார்:

"ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருந்தும் இதனைப்பற்றி அக்கறையில்லாமலிருப்பது கவலைக்குரியது" என்றும் அவர் மேலும் கூறினார். (ரி

## இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் இன்று நூல் நிலையப் பிரிவொன்று திறக்கப்படவுள்ளது. (வி)